
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஏப்ரல் 12, 2018 | புரட்சி 17 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00



# போராட்டக் களத்தில் கழகத் தோழர்கள்




**அய்.பி.எல். சுவர் விளம்பரம் : கழகத் தோழர்கள் அழித்தனர்**

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட மயிலாப்பூர் தோழர்கள் மற்றும் மந்தவெளி விசாலாட்சி தோட்டம் பகுதி தோழர்கள் இணைந்து 05.04.2018 அன்று சென்னையில் நடைபெறவிருக்கும் ஐ.பி.எல் போட்டிக்காக வரையப்பட்டிருந்த சுவர் விளம்பரங்களை அழித்து அதன் மேல் “ஐபிஎல் வேண்டாம்” - “காவிரி மேலாண்மை வாரியம் வேண்டும்” என்று எழுதி எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

**மந்தவெளி இரயில் நிலையம் முற்றுகை**

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட மயிலாப்பூர் பகுதி தோழர்கள் மற்றும் விசாலாட்சி தோட்டம் பகுதியைச் சார்ந்த மக்கள்



இணைந்து, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் மத்திய அரசைக் கண்டித்து 06.04.2018 காலை 11 மணிக்கு மந்தவெளி இரயில் நிலையத்தை கண்டன முழக்கத்தோடு முற்றுகை யிட்டனர். மந்தவெளி இரயில் தடத்தில் இறங்கி கண்டன முழக்கமிட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு மந்தவெளி திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்.

**விழுப்புரத்தில் அஞ்சலகம் முற்றுகை**

உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்த பிறகும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் அஞ்சல் அலுவலகத்தை 04-04-2018 அன்று நண்பகல்



12 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை தலைமையில் முற்றுகை இடும் போராட்டம் நடத்தப்பட்டது. இராமர், நாகராசன், துளசி, இராசிவ்காந்தி, தமிழரசன், ஆனந்தன், கார்மேகம் மற்றும் 40-க்கும் மேலான தோழர்கள் கலந்துக் கொண்டனர்.

போராட்டத்தில் தமிழகம் தொடர்ந்து மத்திய அரசால் பல்வேறு விதமாக வஞ்சிக்கப்படுமாயின் தனித் தமிழ்நாடு கோரிக்கையை முன்வைத்து தமிழகமெங்கும் மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுப்போம் என்று முழக்கமிட்டனர்.

**நாமக்கல்லில் கண்டன ஆர்ப்பாட்டம்**

காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரியும், ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரியும் திவிக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம், 4.4.2018 அன்று மாலை 5 மணிக்கு பள்ளிப்பாளையம் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. மு.சரவணன் (மாவட்ட செயலாளர்) தலைமை தாங்கினார்.



மா.வைரவேல் (மாவட்ட அமைப்பாளர்), மாரியப்பன் (சி.பி.அய்.எம்.எல்), தண்டபாணி (திவிக), சாமிநாதன் (மாவட்ட தலைவர்), ஆதவன் (தமிழ் தேசியக் கட்சி), வஜ்ரவேல் (தமிழ்ப் புலிகள் கட்சி), செல்வராஜ் (சி.பி.அய்.), முத்துப்பாண்டி (திவிக) ஆகியோர் கண்டன உரையாற்றினர். திருச் செங்கோடு, குமாரப்பாளையம், பள்ளிபாளையம் பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோவையில் வருமான வரித்துறை அலுவலகம் முற்றுகை !**

05.04.2018 காலை 10.30.00 மணிக்கு காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மறுக்கும்



மத்திய, மாநில அரசுகளை கண்டித்து கோவையில் திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தோழமை அமைப்புகளின் சார்பில் வருமான வரித்துறை அலுவலக முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட திவிக, தமிழ்ப்புலிகள், பெரியார் அம்பேத்கர் வாசகர் வட்ட தோழர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர்.

**பவானியில் ஆர்ப்பாட்டம்**

ஈரோடு மாவட்டம் கழக சார்பாக காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி பவானியில் 9.4.2018 காலை 11 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



**மதுரையில் இரயில் மறியல்**

திராவிடர் விடுதலைக்கழகம் ஒருங்கிணைப்பில் தோழமை அமைப்புகளுடன் காவிரி நதி நீர் ஆணையம் அமைக்காத மத்திய பா.ஜ.க மோடி அரசைக் கண்டித்து, 2.4.2018 அன்று மதுரையில் இரயில் மறியல் போராட்டம் நடத்தி தோழர்கள் கைதானார்கள்.

**பொள்ளாச்சியில் இரயில் மறியல்**

05.04.2018 காலை 09.00 மணிக்கு காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மறுக்கும் மத்திய அரசைக் கண்டித்து பொள்ளாச்சியில் திராவிடர்



விடுதலைக் கழகம் மற்றும் தோழமை அமைப்பு களின் சார்பில் இரயில் மறியல் போராட்டம் நடை பெற்றது. பொள்ளாச்சி திருவள்ளுர் திடலில் இருந்து பேரணியாக சென்று பொள்ளாச்சி இரயில் நிலையத்தில் இரயிலை மறித்து போராட்டம் நடை பெற்றது. போராட்டத்தில் கலந்து கொண்ட 180 பேர் கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர்.

போராட்டத்தில், திராவிடர் விடுதலைக் கழகம், திமுக, தமிழ்நாடு திராவிடர் கழகம், வெல்ஃபேர் பார்ட்டி, சிஅய்டியு, காங்கிரஸ், தமிழ்ப் புலிகள், தமிழ்நாடு மாணவர் மன்றம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் பங்கேற்றனர்.

**திருப்பூரில் இரயில் மறியல்**

திராவிடர் விடுதலைக் கழகம் திருப்பூர் மாவட்டம் சார்பில் மாவட்டத் தலைவர் முகில்ராசு தலைமையில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல்



தமிழகத்திற்கு பச்சை துரோகம் செய்யும் இந்திய நடுவண் பாஜக மோடி ஆட்சியைக் கண்டித்து இரயில் மறியல் போராட்டம் 05.04.2018 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் திருப்பூர் இரயில் நிலையத்தில் நடைபெற்றது. இரயில் மறியலில் ஈடுபட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு கல்லூரி சாலையில் உள்ள திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்.

‘நடுவண் ஆட்சி, தமிழகத்துக்கு துரோகம்’ என்ற தலைப்பில் ‘புரட்சிப் பெரியார் முழக்க’ ஏட்டில் வந்த கட்டுரையை 600 படிகள் எடுத்து இரு வேறு மண்டபங்களில் அடைக்கப்பட்டிருந்த அனைத்துக் கட்சி தோழர்களிடமும் விநியோகிக்கப்பட்டது.

**நங்கவள்ளியில் ‘தினமலர்’ நாளேடு எரிப்பு**

தமிழை இழிவுபடுத்திச் செய்தி வெளியிட்ட ‘தினமலர்’ நாளேட்டை 05.04.2018 அன்று நங்கவள்ளி கழகத் தோழர்கள் எரித்தனர்.



### சூரிய நாராயணாவிலிருந்து சூரப்பா வரை

# சமூகநீதிக்கு சவால் விடுகிறார்கள்

தமிழ்நாட்டில் அம்பேத்கர் பெயரில் செயல்படும் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக சூர்ய நாராயண சாஸ்திரி என்ற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனரை ஆந்திரா மாநிலத்திலிருந்து தமிழக ஆளுநர் இறக்குமதி செய்தார். தமிழகத்தில் கடும் எதிர்ப்புகள் வந்தன. அதற்குப் பிறகு அண்ணா பல்கலைக்கழகத்துக்கு கருநாடகத்திலிருந்து சூரப்பா எனும் பேராசிரியரை துணைவேந்தராக ஆளுநர் இறக்குமதி செய்துள்ளார். தமிழ்நாட்டில் பல்கலைக் கழகத் துணைவேந்தராகக் கூடிய தகுதி பெற்றவர்களே இல்லை என்பதுபோல தமிழகத்தின் தனித்துவமான ‘சமூகநீதி’ தத்துவத்துக்கே சவால் விடுவதாக அமைந்துள்ளது ஆளுநரின் இந்த நடவடிக்கை.

தமிழ்நாடு கலை மற்றும் நுண்கலைப் பல்கலைக் கழகத்துக்கு கேரளாவைச் சார்ந்த பரிமளாதேவி என்ற ஒரு பெண் துணை வேந்தராக்கப்பட்டுள்ளார்.

தமிழக அரசின் சார்பில் செய்தியாளர்களிடம் பேசி வரும் அமைச்சர் ஜெயக்குமார், துணை வேந்தரை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கே உண்டு என்று கூறி, ‘சரணாகதி’ அமைச்சரவையாகவே இருக்க விரும்புவதை வெளிப்படுத்திவிட்டார். இதற்கு மாறாக சட்ட அமைச்சராக இருக்கும் சி.வி. சண்முகம், இந்த நியமனங்கள் குறித்து ஆளுநர் தமிழக அரசிடம் கலந்து ஆலோசிக்கவில்லை என்றும், இந்த நியமனங்கள் வருந்தத்தக்கது என்றும் கருத்து கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் எப்போதும் ஆளுநரிடம் விடப்பட்டதில்லை. பல்கலைக்கழக சட்டவிதிகளின் படி தேர்வுக் குழு தரும் பட்டியலிலிருந்து ஒருவரை தேர்வு செய்யும் உரிமை, மாநில அரசிடமே இருந்தது. ஆளுநர் ஒப்புதல் என்பது ஒரு சம்பிரதாயம் தான்.

ஒரு மாநிலத்தின் ஆளுநராக அந்த மாநிலத்தைச் சார்ந்தவர்களையே நியமிப்பதில்லை. அதற்காக ஒரு மாநிலத்தின் ஆளுநராக வந்து உட்காருகிறவர்கள், மாநிலத்தின் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களாக பிற மாநிலத்தவர்களையே பிடிவாதமாக இழுத்து வந்து நியமிப்பது கூட்டாட்சி அமைப்புக்கும் மாநில உரிமைக்கும் எதிரானது. இவை எல்லாவற்றையும் விட தமிழ்நாட்டில் கட்டி எழுப்பப்பட்ட ‘சமூகநீதி’ தத்துவத்துக்கே விடப்படும் சவால். இந்தியா முழுமைக்கும் மத்திய அரசின் பல்கலைக்கழகங்களாக 31 பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. மத்திய பல்கலைக்கழகங்கள் செயல்படாத மாநிலங்களுக்காக புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்க முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி மோடி தலைமையிலான மத்திய ஆட்சி 2016இல் 16 புதிய பல்கலைக் கழகங்களை உருவாக்கியது. 5 ஆண்டுகள் பதவியில் இருக்கக்கூடிய துணைவேந்தர்களும், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் தேர்வுக்குழு பரிந்துரை வழியாக நியமிக்கப்பட்டார்கள்.

**இந்த 16 துணைவேந்தர்களில் ஒருவர்கூட தமிழர் இல்லை.**

திருவாரூரில் புதிதாக தொடங்கப்பட்ட மத்திய பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட பி.பி.சஞ்சய், ஒரு கருநாடகத்துக்காரர். இப்போது துணைவேந்தராக இருக்கும் ஆதித்ய பிரசன்னராய் என்பவர், ஒரிசாக்காரர். இவரை நியமிப்பதற்கான தேர்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த ஒரு உறுப்பினர், “தமிழக பல்கலைக் கழகத்துக்கு ஒருதமிழரை நியமிப்பதே, பல்கலைக் கழக வளர்ச்சிக்கு உதவும்” என்று பரிந்துரையில் எடுத்துக்காட்டியும் மனித வள மேம்பாட்டு அமைச்சகம், அந்தக் கருத்தைப் புறந்தள்ளியது.

கல்வி நிறுவனங்களைக் ‘காவி மயமாக்கும்’ நோக்கத்தோடு, மோடி ஆட்சி செயல்பட்டு வருவதால் காவிகளுக்கு எதிரான தமிழ்நாட்டின் சமூக நீதிப் பண்பாடுகளை சீர்குலைப்பதில் மிகத் தீவிரம் காட்டி வருகிறார்கள். தமிழ்நாட்டில் சமூக நீதி என்பது ஒரு கொள்கை மட்டுமல்ல; அது ஒரு பண்பாடாகவே ‘பெரியார் மண்’ வளர்த்தெடுத்திருக்கிறது.

மோடியின் ஆட்சி கல்வி - கலாச்சாரம் - பாதுகாப்பு என்ற மூன்று முக்கிய துறைகளில் முடிவெடுக்கும் அதிகாரத்தை ஆர்.எஸ்.எஸ். அமைப்பிடம் ஒப்படைத்துவிட்டது. (இது குறித்து ‘நிமிர்வோம்’ மார்ச் இதழில் விரிவான கட்டுரை வெளி வந்துள்ளது)

‘சிக்ஸா ஸான்ஸ்கிருதி உதன் நியாஸ்’, பாரதிய சிக்சா மண்டல்’ என்ற ஆர்.எஸ்.எஸ். துணை அமைப்புகள் கல்வித் துறையை தனது முழுமையான அதிகாரத்துக்குள் வைத்திருக்கிறது. அவ்வப்போது மத்திய அமைச்சர்களுடனான சந்திப்புகளை நடத்தி அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறது.

‘நாக்பூர்’ தலைமையகத்திலிருந்து கிண்டி ஆளுநர் மாளிகைக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் அவை செயல்படுத்தப்படுகின்றன. ‘சரணாகதி’ அமைச்சரவை இதை வேடிக்கைப் பார்க்கிறது.

இனி, தமிழக பா.ஜ.க.வுக்கு தலைமை தாங்க, ஏன் ‘தமிழ் இசை’களை நியமிக்க வேண்டும்? ‘இந்துஸ்தானி இசைகளை’ வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கட்சியை நடத்த வேண்டியது தானே? தமிழர்கள் உணர்வுகளை சீண்டிப் பார்க்கிறது, பார்ப்பனியம்; கடும் விலையை தரப் போகிறார்கள் என்பது மட்டும் உறுதி.

# வன்கொடுமை தடுப்புச் சட்டம் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறதா?

**1989**ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யக் கூடிய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வடமாநிலங்களில் கடும் கொந்தளிப்பை உருவாக்கியது. (இது குறித்து விரிவான கட்டுரை, கடந்த வாரம் வெளி வந்த ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளியிட்டுள்ளது.)

தமிழ்நாட்டில் கொழுந்துவிட்டு எரியும் காவிரி நீர் உரிமை, நியுட்ரினோ, ‘ஸ்டெர்லைட்’ போராட்டங்களால் இப்பிரச்சினை தமிழகத்தில் இன்னும் தீவிரப்படவில்லை.

2016ஆம் ஆண்டில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் பட்டியலினப் பிரிவினர் தொடர்பாக 7.7 சதவீத வழக்குகளிலும், 11.1 சதவீதம் பழங்குடியினர் தொடர்பான வழக்குகளிலும் தண்டிக்கப்பட்டுள்ளனர். தென் மாநிலங்களிலே தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வில் தமிழ்நாடு முன்னிலையில் இருந்து வருகிறது என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’வின் கட்டுரை ஒன்று சுட்டிக்காட்டினாலும், இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் முறையாக நடத்தப்படுவது இல்லை என்பதே உண்மை.

பாட்டாளி மக்கள் கட்சி, கொங்கு வேளாளர் போன்ற ஜாதி சங்கங்கள் இந்தச் சட்டத்தையே நீக்கிட வேண்டும் என்று பேசி வருகின்றன. இதற்காகவே பாட்டாளி மக்கள் கட்சி, பிற்படுத்தப்பட்ட ஜாதிகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி தலித் சமூகத்தை தனிமைப்படுத்த முயன்றது. இந்த முயற்சிகளில் அக்கூட்டமைப்பு கடும் பின்னடைவையே சந்தித்தது.

2016ஆம் ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் பட்டியல் இனப் பிரிவினருக்கு எதிரான வன்கொடுமை வழக்குகளாக பதிவு செய்யப்பட்டவை - 1291.

இந்தச் சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் நீதிமன்ற விசாரணையிலிருந்து வரும் மொத்த வழக்குகள் - 5054.

காவல்துறையின் விசாரணையில் உள்ள வழக்குகள் - 1905.

இதில் 97 வழக்குகளின் நம்பகத் தன்மை உறுதியாகியுள்ளது. ஆனால் முறையான சாட்சியங்கள் கிடைக்கவில்லை. தவறாக பதியப்பட்ட வழக்குகள் - 172 என கண்டறியப்பட்டு வழக்குகள் விசாரணைக்கு ஏற்கப்படவில்லை.

உ.பி.யில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 70 சதவீத வழக்குகளில் தண்டனை கிடைத்துள்ளது. 2016ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே உ.பி. இதில் முதலிடம் பெற்றிருக்கிறது.

தேசிய சராசரியாக இந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட சதவீதம் 20.8 ஆக இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் மட்டும் தேசிய சராசரிக்குக் குறைவாக 11.1 சதவீத வழக்குகளிலேயே தண்டிக்கப்பட்டுள்ளனர்.

‘குற்றங்களுக்கான தேசிய ஆவணப் பதிவு’ நிறுவனம் தரும் புள்ளி விவரங்களின்படி இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவது தமிழகத்தில் மிகவும் குறைவானதாகவே இருக்கிறது. பாதிக்கப்பட்ட ஒரு தலித் வன்கொடுமை சட்டத்தின் கீழ் புகார் தரும்போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த தலித் மீது வேறு சட்டப் பிரிவுகளில் பொய் வழக்குகளைத் தொடர்ந்து மிரட்டுகிறார்கள். வழக்குகளைச் சந்திக்கும் வலிமையற்ற நிலையில் தலித் மக்கள் நீதிமன்றத்துக்கு வெளியே பிரச்சினையை பேசித் தீர்த்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்” என்று சமூக ஆர்வலர்கள் கூறுகிறார்கள்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 12.04.2018**

## நியூட்ரினோ திட்டத்தை எதிர்ப்பது ஏன்?

இந்தத் திட்டத்தை ஏன் எதிர்க்கிறார்கள்? என்பது குறித்து பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் வழக்கறிஞர் வெற்றிச் செல்வன் கூறியதாவது:

இரண்டு காரணங்களுக்காக இந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம். முதலில், இந்தத் திட்டத்துக்கு தேர்வு செய்த இடம் மேற்கு தொடர்ச்சி மலை என்பதால், இந்தியாவின் பிரதான ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில்தான் உற்பத்தியாகின்றன. இதில் 2 கிலோ மீட்டர் அளவுக்கு சுரங்கம் தோண்ட உள்ளனர். அதற்கு 6 இலட்சம் டன் பாறைகளை வெடி வைத்து தகர்க்க உள்ளனர். இது சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இத்திட்டத்துக்கு தேர்வு செய்துள்ள இடத்துக்கு அருகாமையில் முல்லைப் பெரியாறு, இடுக்கி உள்பட 12 அணைகள் உள்ளன. பாறைகள் தகர்க்கப்படும்போது, அணைகள் சேதமடையும் அபாயம் உள்ளது.

இத்திட்டம் பற்றி மக்களிடம் கருத்து கேட்க வேண்டும். சுற்றுச் சூழல் பாதிப்புகள் குறித்து ஆய்வுகள் நடத்த வேண்டும். ஆனால், இந்த ஆய்வுக்கூடம் அமைக்க கட்டிட கட்டுமானம் என்ற பெயரில் விண்ணப்பித்து அனுமதி பெற்றுள்ளனர். இதற்கு மக்கள் கருத்து கேட்கத் தேவையில்லை. மக்கள் கருத்து கேட்காமல் எப்படி இதை செயல்படுத்த முடியும்? அனுமதி கொடுக்கும் முன்பு நிபுணர் குழு ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும். பாறைகளை உடைப்பதால் சுற்றுச் சூழலில் ஏற்படும் தாக்கம் குறித்து இதுநாள் வரை ஆய்வுகள் மேற்கொள்ளவில்லை. சுற்றுச் சூழல் பிரச்சினை, விவசாயம், மக்கள் பாதிப்பு, காற்று மாசுபாடு தொடர்பான எந்த ஆய்வும் மேற் கொள்ளவில்லை.

2ஆவது காரணமானது, அடிப்படையில் இந்தத் திட்டத்தின் மீது எழும் கேள்விகள் ஆகும். திட்ட அறிக்கையில் இயற்கை நியூட்ரினோவை ஆய்வு செய்வது முதல் நிலை. 2ஆவது நிலை, செயற்கை நியூட்ரினோக்களை, அமெரிக்கா, ஜப்பான், சுவிட்சர்லாந்து நாடுகளுக்கு அனுப்பி, சோதனை செய்வது.

இதுநாள் வரை சுமார் 250 கிலோ மீட்டர் தூரம் செயற்கை நியூட்ரினோ கதிர்களை அனுப்பித் தான் சோதனை செய்யப்பட்டுள்ளது. ஆனால், சுமார் 7 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்துக்கு செயற்கை நியூட்ரினோ கதிர்களை அனுப்பி சோதனை செய்ய உள்ளனர். செயற்கை நியூட்ரினோக்களை அனுப்பும்போது உருவாகும் கதிர்வீச்சு, அதன் மூலம் என்ன நிகழும் என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இந்தத் திட்டம் தொடர்பாக இந்தியா–அமெரிக்கா இடையே பல ஒப்பந்தங்கள் போடப்பட்டு உள்ளன. அதில் கடந்த 2010ஆம் ஆண்டு போடப்பட்ட ஒரு ஒப்பந்தத்தில், தீவிரவாதிகள் அணு ஆயுதங்கள் பதுக்கி வைத்து இருந்தால் அதை கண்டுபிடித்து, செயல் இழக்கச் செய்யவோ, வெடிக்க வைக்கவோ இந்த நியூட்ரினோ ஆய்வால் முடியும் என்று கூறப்படுகிறது. இந்த 2ஆவது பகுதி தான் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். பேரழிவு ஏற்படும் அச்சம் உள்ளது.

அவசர அவசரமாக இந்தத் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு துடிக்கிறது. மக்களிடம் கருத்து கேட்காமல், சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த மதிப்பீடுகள் செய்யாமல் செய்ய உள்ள ஆய்வை ஏற்க முடியாது.

## ‘பக்தி’ எங்கே போகிறது?

- வடபழனி சிவன் கோயிலில் ஆகமவிதிகளின் படி அர்ச்சகராகப் பணியாற்றும் ஒரு ‘பிராமண’ இளைஞர் மனைவியைக் கொலை செய்த வழக்கில் கைதாகியுள்ளார்.
- கோவை மேட்டுப்பாளையத்தில் கோயில் பிரசாதம் சாப்பிட்ட 2 பேர் மரணமடைந்தார்கள்; 30 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.
- பழனி கோயிலில் முருகன் நவபாஷாண சிலையை மறைத்து தங்கத்தால் செய்து வைக்கப்பட்ட சிலையில் தங்கத்தைத் திருடியதாக சிலை செய்த ஸ்தபதியும் அற நிலையத் துறை அதிகாரியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- திருத்தணி, காஞ்சிபுரம் உள்ளிட்ட 20 ஊர்களில் கோயில்களுக்கு தங்கத்தில் தேர் செய்ததில் மோசடிகள் நடந்தது அம்பலமாகியுள்ளது. இவை இவ்வாராய்ச்சி செய்திகள்.

உண்மையில் கடவுள் என்பது சிலை தான் என்ற உண்மை அர்ச்சகருக்கும் சிலை செய் பவருக்கும் கோயிலை நிர்வகிப்பவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. அதனால்தான் இவ்வளவு மோசடிகள்.

பாவம்; அப்பாவி மக்களுக்குத்தான் புரியவில்லை; தன் பெயரால் வழங்கப்படும் பிரசாதத்தில் நச்சுத்தன்மை இருக்கிறது என்பது அந்தக் கடவுளுக்கும் தெரியவில்லை.

சக்தி இருந்தால்தானே தெரியும்?

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் பேச்சு (9)

# ஞான சம்பந்தனின் ‘அனல்–புனல்வாத’ மோசடிகள்

*‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையின் விரிவாக்கம். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

சைவத்தைப் பரப்பிய அப்பர், சம்பந்தர் ஆகியோர் குறித்த உண்மை வரலாறுகள் குழப்பம் நிறைந்தவை. தேவாரத்தில் உள்ள சில பாடல்கள் பெரிய புராணம் கூறும் சில சம்பவங்கள், சமணர்களின் கிராமங்களில் வழங்கப்பட்ட வாய்மொழிக் கதைகள்தான் இவர்களைப் பற்றி பேசுகின்றன. புத்தர்களையும், சமணர்களையும் கடுமையாகத் தாக்கி அழிப்பது குறித்து தேவாரம், பெரிய புராணம் நூல்கள் பேசுகின்றன. இதில் சைவமும் வைதீகமும் கைகோர்த்து நின்றிருக்கின்றன. ‘அப்பரும் சம்பந்தரும்’ என்ற அரிய ஆராய்ச்சி நூலை தமிழறிஞர் அ. பொன்னம்பலனார் எழுதினார். 1944இல் ‘குடிஅரசு’ பதிப்பகம் இந்த நூலை வெளியிட்டது.

சமணம் தழைத்தோங்கி வைதிகம் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த காலத்தில் சோழ நாடான சீர்காழியில் சிவபாத விருதையர்-பகவதி ஆகிய ‘பிராமண’ வைதிக தம்பதிகளுக்குப் பிறந்தவன் சம்பந்தன். சமண மத எழுச்சியால் புரோகிதத் தொழில் நெருக்கடிக்கு உள்ளானதால் புரோகிதர்கள் ஆங்காங்கே கூடி, தங்கள் வைதிகத் தொழிலை மீட்பது குறித்துப் பேசி வந்தனர். தனது தந்தை வேதத் தொழில் பாதிப்புக்குள்ளாகிவிட்டது குறித்து வருந்தி தாயிடம் அழுதபோது, தமிழ் கற்ற மகன் சம்பந்தன், தந்தையைத் தேற்றுகிறான். ‘அப்பா அழாதே, எவ்வாறாயினும் இந்த சமணப் பூண்டை வேரறுக்க நமது குடும்பம் தியாகம் செய்ய வேண்டுமே தவிர, புலம்புவதால் பயனில்லை” என்று தேற்றி, “வேதத்துக்கும் யாகத்துக்கும் தீங்கிழைப்பவரை அழிக்காமல் வீடு திரும்ப மாட்டேன்” என்று சபதம் செய்து வீட்டை விட்டு வெளியேறுகிறான் என்று எழுதுகிறார். தமிழ் அறிஞர் அ.பொன்னம்பலனார்.

இதேபோல திருவாரூரில் சைவக் குடும்பத்தில் பிறந்த திருநாவுக்கரசர், அவரது தங்கை திலகவதி இருவரும் சமண மதத்தின் மீது வெறுப்புற்றிருந்தனர். சம்பந்தர் இவர்களை சந்தித்து வேதப் பெருமைகளைப் பேசி சமணத்தை இகழ்ந்தார். மூவர் அணி உருவானது. சைவ வெறியரான திருநாவுக்கரசர் சமணராக வேடம் தரித்து, தனது பெயரை தருமசேனர் என்று மாற்றிக் கொண்டு, சமண முனிவர்கள் தங்கியிருந்த மடங்களுக்குச் சென்று தங்கி சமணராகவே நடித்து, சமண முனிவர்களிடம் வாதிட்டு, தனது புலமையை நிலைநாட்டினார். திருநாவுக்கரசருக்கு அப்பர் என்ற பெயரும் உண்டு. சில காலம் சமண வேடம் தரித்த திருநாவுக்கரசர் என்ற அப்பர், வயிற்று வலி வந்ததுபோல் நடித்து, சமணர்களால் அதைக் குணமாக்க முடியாத நிலையில் சிவபெருமான், தங்கை திலகவதியின் கனவில் வந்து, சைவத்திலிருந்து சமணத்துக்கு மாறியதால்தான் வயிற்று வலி வந்ததாகக் கூறியதாகவும், சிவபெருமான் சில பாடல்களைப் பாடியவுடன், அப்பரின் வயிற்றுவலி பறந்தோடி விட்டது என்றும் மக்களை நம்ப வைத்தனர். சமணத்தை ஒழிக்க இப்படிப்பட்ட மோசடிப் பிரச்சாரங்கள் நடப்பதை அறிந்த சமணர்கள், பல்லவ மன்னனிடம் புகார் கூற மன்னன் அப்பரை வரவழைத்து, “நீர் உமது மதத்தைப் பரப்ப உரிமை யுண்டு; ஆனால் சமணத்தைத் தூற்றுதல் கூடாது” என்று எச்சரிக்கவே அப்பர் நாட்டைவிட்டு வெளியேறினார்.

பெரியார் இயக்கத்தின் முன்னணித் தலைவரும் வாழ்நாள் முழுதும் பெரியார் கருத்துகளை மேடைகளில் பரப்பியவருமான பெரியார் பெருந்தொண்டர் சுயமரியாதை சுடரொளி திருவாரூர் தங்கராசு, சைவம் குறித்து பல விரிவான ஆய்வுகளை நடத்தி நூல்களை எழுதினார். அதில் சம்பந்தன் மோசடிகளை ஆதாரத்துடன் விளக்கும் ‘திருஞான சம்பந்தர்’ என்ற நாடக நூலும் மிகவும் முக்கியமானது.

சம்பந்தன், சிறுவனாக சீர்காழி குளத்தில் மூழ்கி எழுந்தபோது சிவபெருமான் ஞானப்பால் தந்தார் என்றும் உடனே சிறுவன், ‘தோடுடைய செவியன் இடையேறியோர் தூவெண்மதி சூடி’ என்று பதிகம் பாடத் தொடங்கினான் என்றும் கூறியது மக்களை ஏமாற்றி நம்ப வைக்கச் செய்யப்பட்ட நாடகம் என்பதை பெரிய புராணம், தேவாரப் பாடல்களைக் கொண்டே திருவாரூர் தங்கராசு நிறுவியுள்ளார். சம்பந்தன், ‘ஞானப்பால்’ குடிப்பதற்கு முன்பே சமண - பவுத்த நெறிகளை ஒழிக்க வந்தவன் என்று வேதியர்கள் கூறியிருக்கிறார்கள். பெரியபுராணத்தில் வரும் 47ஆவது பாடல் இந்த உண்மையை உறுதி செய்வதை அவர் எடுத்துக் காட்டுகிறார். ‘ஞானப் பால்’ குடித்த பிறகும் சம்பந்தன், சமணர்களை புத்தர்களை அழிப்பதையேப் பாடுகிறான்.

“சமணரும், தேரரும் (புத்தரும்) யாகங்களையும் வேதங்களையும் குறை கூறுகிறார்கள். அவர்களை வாதத்தில் வெல்ல வேண்டும், அதற்கு சிவபெருமான் திருவுள்ளம் காட்ட வேண்டும் என்று பாடும் சம்பந்தன், புத்தர்-சமணர் மனைவியர்களை ‘கற்பழிக்க’ - சிவபெருமான் தனக்கு அருள் செய்ய வேண்டும்” என்கிறான். பெரியார்கூட தனது இறுதிப் பேருரையில் இந்தப் பாடலை எடுத்துக்காட்டி கண்டித்துப் பேசினார்.

“மண்ணகத்திலும் வானிலும் எங்குமாய்த்
திண்ணகத் திருவாலவாய் அருள்
பெண்ணாகத் தொழில் சாக்கியர் பேயமண்
பெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே”

என்பதே அப்பாடல். புத்த-சமண மதங்கள் மீது வேத புரோகிதக் கூட்டம், எவ்வளவு ஆத்திரம் கொண்டு அலைந்தது என்பதற்கு இப்பாடலைவிட வேறு சான்று வேண்டாம். இந்தப் பாடல் வரிகளும் பிற்காலத்தில் திரித்து வெளியிடப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலை ஆதினம் ஆறுமுகத்தம்பிரான், 1885இல் வெளியிட்ட திருஞானசம்பந்தர் சுவாமிகள் வரலாற்று நூலில் இந்தப் பாடல் அப்படியே இடம் பெற்றுள்ளது. அதற்குப் பிறகு 1950இல் வெளியிடப்பட்ட திருஞானசம்பந்தர் வரலாற்றில் **‘பெண்ணர்’ என்ற சொல்லை ‘தெண்ணர்’ என்று சொல் மாற்றம் செய்த திரிபுவேலையையும் திருவாரூர் தங்கராசு தனது ஆய்வுத் திறனால் அம்பலப்படுத்தியிருக்கிறார்.**

நின்றசீர் நெடுமாறன் என்றும் கூன்பாண்டியன் என்றும் அழைக்கப்பட்ட பாண்டிய மன்னன் ஆட்சி காலத்தில் தான் (கி.பி.640-670) சம்பந்தன் திருவிளையாடல்களால் ‘அனல்வாதம் - புனல்வாதம்’ 8000 சமணர்களைக் கழுவேற்றி துடிக்கத் துடிக்க சொல்லப்பட்ட கொடூரங்கள் அரங்கேற்றப்பட்டன.

**‘தகிடுதத்தம்’ என்ற சொல் உருவானதற்குக் காரணமே சம்பந்தன் தான்.**

பாண்டிய மன்னன் சமணத்தை தழுவினான். அவனது மனைவி மங்கையற்கரசி தீவிரமாக சைவ வெறியோடு செயல்பட்டவள். பாண்டியன் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த குலச்சிறை என்ற அமைச்சரும் தீவிர சைவர். சமண மதத்திலிருந்து பாண்டிய மன்னனை சைவ மதத்துக்குத் திருப்ப, சம்பந்தன் - பாண்டியன் மனைவி மங்கையற்கரசி, அமைச்சர் குலச்சிறை மூவரும் இணைந்து சதித் திட்டங்களை நடத்துகிறார்கள். பாண்டிய மன்னன் தீராத வயிற்று வலியால் துடித்தான். சமணர்கள் மூலிகைகளைக் கொண்டு செய்த சிகிச்சை பலனளிக்காததால் சம்பந்தன் ‘திருநீறு’ எனும் சாம்பலைப் பூசி பதிகம் பாடி பாண்டியன் வயிற்று வலியைப் போக்கினான் என்பது கதை. மன்னனை சைவனாக்கியதோடு 8000 சமணர்களையும் கழுவில் ஏற்றிக் கொல்ல திட்டமிட்டான் சம்பந்தன்.

உண்மையில், பாண்டியன் வயிற்று வலிக்கு சம்பந்தனே காரணம். பாண்டியன் மனைவி வழியாக கனி ரசத்துடன் வயிற்று வலியை உண்டாக்கும் மருந்தைக் கொடுத்து குடிக்கச் செய்கிறான். வயிற்று வலியால் துடிக்கும் மன்னனிடம் சமணர்களால் நோயைத் தீர்க்க முடியாது. சம்பந்தனால் மட்டுமே தீர்க்க முடியும் என்று மன்னனிடம் தூபம் போட்டு சம்பந்தனிடம் சிகிச்சைப் பெறுவதற்கு மன்னனை ஏற்கச் செய்கிறாள். சம்பந்தன் அரண்மனைக்கு சிகிச்சைக்கு வரும்போது பாண்டியன் மனைவி இடையிடையே ஒரு குவளையில் திரவத்தைக் கொடுத்து மன்னனைக் குடிக்க வைக்கிறாள். இது சம்பந்தன் உருவாக்கிய நோயைத் தீர்க்க சம்பந்தனே தந்த மருந்தின் கலவை. ஆனால் வயிற்று வலியை தனது திருநீறு சக்தியால் போக்கியதாக சம்பந்தன் நாடகமாடுகிறான்.

மந்திரமாவது நீறு
வானவர் மேலது நீறு!
சுந்தரமாவது நீறு!
தந்திரமாவது நீறு!

- என்று பாடி திருநீறை அள்ளி அள்ளி மன்னன் மீது தடவுகிறான். முதலில் ‘தந்திமாவது நீறு’ என்று பாடியவன் சமணர்கள் குறுக்கிடவே சுதாரித்துக் கொண்டு ‘சமயத்தில் உதவுவது திருநீறு’ என்று மாற்றிப் பாடுகிறான். வயிற்று வலி குறித்து கண்டறியும் மருத்துவ அறிவியல் வளர்ச்சி அப்போது இருந்திருக்குமானால், இந்த மோசடிகளை நடத்தியிருக்க முடியாது.

மருந்தே இல்லாமல் ‘திருநீறு’ மூலம் மன்னன் வியாதியை குணமாக்குகிறேன் என்று சமண முனிவர்களிடம் சவால் விட்டு, வீண் சண்டைக்கு இழுக்கிறான் சம்பந்தன். சமணர்கள் ஏடுகளையும் சைவ ஏடுகளையும் எரியும் நெருப்பில் போட வேண்டும். எரியாதவை உண்மையான மதம். பிறகு ஓடும் ஆற்றில் போட வேண்டும். எதிர் நீச்சல் அடித்து எந்த ஏடு அழியாது இருக்கிறதோ அந்த மதமே உண்மையானது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இரண்டு போட்டிகளிலும் தோற்கிற மதப் பிரிவினர் கழுவில் ஏற்றிக் கொல்லப்பட வேண்டும் என்பது சம்பந்தன் விதித்த போட்டி. இதில் அடங்கியுள்ள சூழ்ச்சிகளைப் புரிந்த சமணர்கள் தயங்குகிறார்கள். ஆனால் பாண்டியன் மனைவியும், அமைச்சர் குலச்சிறையும் சமணர்களை நிர்ப்பந்தித்து போட்டிக்குப் பணிய வைக்கிறார்கள். மன்னனுக்கும் இதில் உடன்பாடு இல்லாமல் தயக்கம் காட்டுகிறான். அவனையும் கட்டாயப்படுத்தியே பணிய வைக்கிறார்கள்.

மன்னனின் கட்டளைக்கு பயந்து சமணர்கள் தங்களின் ஓலைச் சுவடிகளை எல்லாம் கட்டுக்கட்டாக நெருப்பில் கொட்டுகிறார்கள். அவ்வளவும் எரிந்து அழிந்தன. சம்பந்தன் தனது சைவ கருத்துகளை அப்படியே ஒரே ஏட்டில் “ஏற்றி” யுள்ளேன். இந்த ஒரு ஏட்டை நெருப்பில் போடுகிறேன். எரிகிறதா என்று பாருங்கள் என்று சவால் விட்டு நெருப்பில் போடுகிறான். அப்போது சமண முனிவர் கந்துசேனர், நெருப்பில் போட்டு எரியாத ‘சைவ’ ஓலையை எல்லோரிடமும் எடுத்துக்காட்டு என்று சவால் விடுகிறார். சம்பந்தன் தடுமாறி கையிலிருந்த ஏட்டைக் காட்ட மறுக்கும்போது கந்துசேனர் பிடுங்கி தரையில் வீசுகிறார். அது ‘இரும்புத் தகடு’. ‘இரும்புத் தகடு’ நெருப்பில் எப்படி எரியும்? இதனால் தான் இப்போதும் மோசடிக்கு ‘தகிடுதத்தம்’ என்ற சொல் வழக்கத்தில் இருந்து வருகிறது. இப்படி சமண ஏடுகள் திட்டமிட்டு எரிக்கப்பட்டன.

அதேபோல் ஏடுகளை வைகை ஆற்றில் விடும் ‘புனல்வாதம்’கூட மோசடியாகவே நடந்தது. சமணர்கள் ஏடுகள் ஆற்றில் கொட்டப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன. ஒரே ஒரு சைவ ஏடு மட்டும் தண்ணீரில் போட்டவுடன் மூழ்கியது. அப்போது ‘வாழ்க அந்தணர்’ என்றே சம்பந்தன் பாடுகிறான். ஏட்டை ஆற்றில் போட்டவுடன் பாண்டியன் அமைச்சரவையில் சம்பந்தன் சதிகளுக்கு உடந்தையாக இருந்த அமைச்சன் குலச்சிறையார், ஏடு எதிர்த்து தண்ணீரில் போவதாகக் கூறிக் கொண்டே எதிர்நீச்சலில் போகும் ‘ஏட்டை’ எடுத்து வருவதாகக் கூறி குதிரையில் ஏறி பாய்ச்சல் வேகத்தில் போகிறான். சமணர்கள் கண் முன் நடந்த மோசடியை எதிர்த்து கூச்சலிடுகிறார்கள். அதிகாரிகள் சமணர்களை மிரட்டி அடக்குகிறார்கள். குதிரையில் ஏறிச் சென்ற குலச்சிறை திரும்பி வந்து, மன்னரிடம் ஒரு ஏட்டைக் காட்டி இதுதான் சம்பந்தன் ஆற்றில் விட்ட ஏடு என்றும், திருவேடகம் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருவடிக்கருகில் சென்று ஏடு அப்படியே நின்றுவிட்டது என்றும் கதை விடுகிறான். மன்னனும் நம்பி விடுகிறான். அதற்குப் பிறகு போட்டியில் தோற்ற சமணர்களைக் கழுவில் ஏற்ற வேண்டும் என்று சம்பந்தன், மன்னனின் மனைவி, அமைச்சர் குலச்சிறை, மன்னனை வற்புறுத்து கிறார்கள். மன்னன் அதை விரும்பாத நிலையிலும் அமைச்சர் குலச்சிறை, கழுவில் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் ஏற்கனவே செய்து குலச்சிறையே கழுவில் ஏற்ற உத்தரவிடுகிறான்.

திருவாரூர் தங்கராசு அவர்கள் தீட்டிய திருஞானசம்பந்தர் நாடகத்தில் அந்தக் காட்சிகள் இவ்வாறு சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

*“சம்பந்தன் : குழந்தை, குட்டிகள், பெண்டுகள், பெரியவர்கள் என்று பார்க்க வேண்டாம். சமணப் பூண்டு ஒன்றுகூட இருக்கக் கூடாது! நாங்கள் பார்க்க வருவோம்.*

*(நிலைமை கட்டுக்கடங்காது போய் விட்டதைப் பார்த்த பாண்டியன் மவுனம் சாதித்து விடுகிறான் சம்பந்தனுக்குப் பயந்து! உடனே தளபதிகளும் வீரர்களும் பாய்ந்து சென்று சமணர்களை வளைத்துக் கொண்டு இழுத்து வருகின்றனர்! வேடிக்கைப் பார்க்க வந்த கூட்டத்தில் உள்ள சமண நெறியைச் சார்ந்த ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் சிதறி ஓடுகின்றனர்! சைவ வெறியர்களும்,*

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தருமபுரியில் கழகப் பரப்புரைப் பயணம்





20.03.2018 காலை 10.30 மணிக்கு பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பரப்புரைப் பயணம் பென்னாகரம் பேருந்து நிலையத்தில் ஜிரிஸி இசைக் குழுவின் பறை முழக்கத்துடன் துவங்கியது.

நிகழ்வின் நோக்கத்தைத் தொடக்க வுரையாக மாவட்ட அமைப்பாளர் சந்தோசுக்குமார் விளக்கினார். அடுத்து மடத்துக்குளம் மோகன் மந்திரமல்ல. தந்திரமே என்று அறிவியல் விளக்க நிகழ்ச்சியுடன் பல்வேறு கருத்துகளை தொகுத்து வழங்கினார். கல்வி வேலை வாய்ப்பில் பறி போகும் உரிமைகள் பற்றி ஆரூர் பெருமாள் உரையாற்றினார்.

அடுத்து பொருளாளர் திருப்பூர் துரைசாமி - விவசாயிகளின் பறிபோகும் உரிமைகள் பற்றிய உரைக்குப் பின் தருமபுரி மாவட்ட செயலாளர் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது. மதிய உணவு சந்தோசு குமாரின் தொழிலகத்தில் வழங்கப் பட்டது.

பி.அக்ரகாரம் பகுதியில் சந்தோஸ் குமார் (மாவட்ட அமைப்பாளர்) தொடக்கவுரையாற்றினார். கொளத் தூர் பகுதி மாணவர் அமைப்பாளர் சந்தோஸ் கல்வி வேலை வாய்ப்புகள் பற்றி உரையாற்றினார், ஆருர் பெருமாள் உரையைத் தொடர்ந்து, இறுதியாக காரைக்குடி முத்து விரிவாக சிறப்புரையாற்றினார்.

மாலை 7 மணியளவில் பண்ட அள்ளியில் வேணுகோபால் (மாவட்ட தலைவர்) தலைமையில் பரப்புரை நடந்தது. ‘மந்திரமல்ல, தந்திரமே’ அறிவியல் நிகழ்ச்சியை மடத்துக்குளம் மோகன் நடத்தினார். அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி உரையாற்றினார். பெருமாள் நன்றி கூறினார். மாவட்டத் தலைவர் வேணு கோபால் வீட்டில் இரவு உணவு வழங்கப்பட்டது.

21.03.18 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு இண்டூர் பேருந்து நிலையத் தில் பரப்புரைப் பயணம் தொடங்கியது வேணுகோபால் தலைமை தாங்கினார். தொடக்கவுரையாக, மடத்துக்குளம் மோகன் இயக்க வெளியீடுகளை அறிமுகப்படுத்தினார். அடுத்து சி.பி.அய்.எம். கட்சியைச் சார்ந்த பி.டி. அப்புனு, கழகப் பொருளாளர் துரைசாமி பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் உரையாற்றினர். சந்தோசுகுமார் நன்றி கூறினார்.

காலை 10 மணிக்கு பென்னாகரம் பேருந்து நிலையம் அருகில் பறை இசையுடன் பரப்புரைப் பயணம் துவங்கியது. கழக மாவட்டத் தலைவர் வேணுகோபால் தலைமை தாங்கினார். அமைப்பாளர் சந்தோசுகுமார் தொகுத்து வழங்கினார். மடத்துக்குளம் மோகன் நிகழ்த்திய ‘மந்திரமா தந்திரமா’ அறிவியல் விளக்க நிகழ்ச்சி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து பெருமாள் உரையாற்றினார். பொருளாளர் திருப்பூர் துரைசாமி சிறப்புறையாற்றினார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மடம் ஆறுமுகம் குடிதண்ணீர் பாட்டில்களை நன்கொடையாக வழங்கினார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*அரசாங்க வீரர்களும் அவர்கள் அனைவரையும் விரட்டிப் பிடிக்கின்றனர். சற்று நேரத்திற்கெல்லாம் ஆற்றங்கரை முழுமையும் ஒரே அல்லோலகல்லோலமாகிறது. எங்கும் கூச்சலும் குழப்பமும். இவைகளைப் பார்த்தும் மன்னன் ஏதும் செய்ய இயலாதவனாய் - செயலற்று சிலைபோல் நிற்கிறான்!*

*மதுரை நகரின் பல பகுதிகளிலும், சைவமத வெறியர்களும், அரசாங்க வீரர்களும் சமணர்களை வேட்டையாடுகின்றனர். எங்கும் ஒரே கூச்சலும், குழப்பமும், அவல ஒலியும் நிறைந்து கேட்கின்றது! சிலர் பயந்து கொண்டு திடீரென பட்டைபூசி! கொட்டை கட்டி, ‘சிவ சிவ’ என்று முணுமுணுத்துத் தப்புகின்றனர். சிலர் ஓடிச் சென்று மீனாட்சி ஆலயத்துள் சரண் புகுகிறார்கள். உடனே மதம் மாறுகிறார்கள்! “நகரமே நரகமாகக் காட்சியளிக்கிறது! வேத மதவெறி அதன் உச்சியிலே நின்று செயல்படுகிறது!” ஆங்கே சம்பந்தனும், சீடர்களும், குலச்சிறையும், மங்கையர்க்கரசியும் சென்று சமணர்கள் வேட்டையாடப்படுவதைக் கண்டு களிக்கின்றனர்.*

*வைகை ஆற்றங்கரை அருகில் எண்ணற்ற அளவில் நடப்பட்டிருக்கும் கழுமரங்களில், ஆயிரக்கணக்கான சமண நெறியினர் ஏற்றப்பட்டு துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கின்றனர். காக்கையும், கழுகும், நாயும், நரியும் பலரது உடல்களையும் கொத்தியும் பிய்த்தும் நாசம் செய்கின்றன. ஒருபுறம் சம்பந்தனும், குலச்சிறையும், மங்கையர்க்கரசியும் சைவ வெறியர்களும் நின்று ஒவ்வொருவரும் கழுவில் ஏற்றப்படும்போது தங்கள் ஆரவாரத்தைத் தெரிவித்தபடி நிற்கின்றனர். ஏறக்குறைய எண்ணாயிரம் சமணர்களைக் கழுவில் ஏற்றிய பிறகு, சில வீரர்கள் சமணர்களின் முக்கிய தலைவர்கள் எல்லோரையும் கொண்டு வந்து வரிசையாக நிறுத்தி ஒவ்வொருவராகக் கழுவில் ஏற்றுகின்றனர்.*

**சமண முனிவர் கந்துசேனர் :** *அருகா! அநீதியை எதிர்த்துப் போராடி னோம். அநியாயமாக அழிகின் றோம்! வருங்காலமாவது இதற்கு ஒரு வழி காணட்டும்... அன்புத் தமிழகமே எங்களை என்றும் மறந்து விடாதே! உன் உயர்வுக்கு உழைத்த நாங்கள் அழிகின்றோம். எமது அழிவுக்கு வழி கண்டார். வாழ்கின்றார்கள் - மறந்துவிடாதே! மறந்துவிடாதே! இதை என்றுமே மறந்துவிடாதே... அருகா! அருகா!*

*(இறுதியாக அவரையும் கழுவில் ஏற்றுகின்றனர். சம்பந்தனும், அவனுடைய கூட்டமும் இடி இடியென சிரித்து மகிழுகின்றனர்!)*

*மதுரைப் பெருநகரின் கண் இலங்கி அறத்தையும், பண்பையும், வளர்த்து வந்த சமணர் பள்ளிகள், பாழிகள், சைத்தியங்கள், விகாரங்கள் அத்தனையையும் சைவ மத வெறியர்களும், அரசு ஊழியர்களும், சம்பந்தன், குலச்சிறை இவர்களின் மேற்பார்வையில் உடைத்தும், தகர்த்தும், பெயர்த்தும் சில இடங்களில் கடைக்கால் (அஸ்திவாரம்) உட்பட தோண்டியும் நாசம் செய்கின்றனர்! பல இடங்களில் மாவீரர் (மகாவீரர்) விருஷபர் மற்றும் உள்ள சமண தீர்த்தங்கரர்களின் சிலைகளையெல்லாம் போட்டு நொறுக்கிவிட்டு, அந்த இடங்களிலே அரி, அரன், கந்தன், விநாயகன் முதலிய உருவாரங்களை நிலைநாட்டுகின்றனர். ஒவ்வொரு இடத்திலும் உடனே மறையவர்களாம் முப்புரியினர் புகுந்து கொள்கின்றனர். இந்தக் காட்சிகளையெல்லாம் சம்பந்தனும், அவனது கூட்டத்தினரும் பார்த்துப் பார்த்து பூரிக்கின்றனர்!”*

*என்று படம் பிடிக்கிறார் திருவாரூர் தங்கராசு.*

*சமணத்தையும் பவுத்தத்தையும் அழித்து, தமிழர் மரபையும் ஊடுறுவி சிதைத்த அதே வேத மரபுதான் இப்போதும் தமிழையும் தமிழரையும் அவமதிக்கிறது; அழிக்கத் துடிக்கிறது.*

**(நிறைவு)**

## குழந்தைகள் பழகு முகாம் - 2018 : 5 நாட்கள்

## *முன் பதிவு ஆரம்பம்*

வரும் 2018 மே மாதம் கோடைக்கால பள்ளி விடுமுறையில் தமிழ்நாடு அறிவியல் மன்றம் நடத்தும் ‘குழந்தைகள் பழகு முகாம்’ (5 நாட்கள்) நடைபெற உள்ளது.

குழந்தைகள் பழகு முகாமில் - கற்பனைத் திறன் வளர்த்தல், படைப்பாற்றல் பெருக்குதல், குழு உரையாடல், கதை உருவாக்கல், ஓவியப் பயிற்சி, கவிதை புனைதல், கட்டுரை வரைதல், அறிவியல் சார்ந்த விளையாட்டுகள் - உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெறும்.

தேதி, இடம், கட்டணம் ஆகியவை விரைவில் அறிவிக்கப்படும்.

கோடையில் கொண்டாடுவோம்!

பள்ளி விடுமுறையை பயனுள்ள தாக்குவோம் !

10 வயது முதல் 15 வயது முடிய உள்ள குழந்தைகள் பங்கேற்கலாம்.

**முன் பதிவு அவசியம்.**

பதிவு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள :

ஆசிரியர் சிவகாமி
தலைவர்
தமிழ்நாடு அறிவியல் மன்றம்
அலைபேசி எண் : 87785 43882
வாட்ஸ் அப் எண் : 99437 48175

## இராசிபுரத்தில் தெருமுனைக் கூட்டம்; கருத்தரங்கம்

8.4.2018 காலை 10 மணிக்கு இராசிபுரம் பழைய பேருந்து நிலையம், லயன்ஸ் கிளப் ஹாலில் ‘ஆரியம்-திராவிடம்-தமிழ் தேசியம்’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. சுமதி மதிவதனி தலைமை வகித்தார். பிடல் சேகுவேரா முன்னிலையில் திருப்பூர் முத்துலட்சுமி வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் வி. பாலு, கலைமதி (திரைப்பட துணை இயக்குனர்), வீரா. கார்த்திக் (தமிழ்நாடு அறிவியல் மன்றம், மாவட்டச் செயலாளர், ஈரோடு வடக்கு), கோபி. வேலுச்சாமி (தலைமைக் கழகப் பேச்சாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினர். இறுதியாக மணிமேகலை நன்றி கூறினார்.

மாலை 6:30 மணியளவில் இராசிபுரம் பழைய கதர்க் கடை அருகே கொள்கை விளக்க தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் இரா.பிடல் சேகுவேரா, வி. பாலு (தி.மு.க) ஆகியோர் உரைக்குப் பின் கோபி.வேலுச்சாமி, கலைமதி (துணைஇயக்குனர், திரைப்படத்துறை) சிறப்புரையாற்றினர். திருப்பூர் சாரதி நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th April 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN